# பிள்ளைகளின் குற்றத்தைத் திருத்துதல்

குற்றம் செய்யும் பிள்ளையை சமயோஜிதமாய்க் கண்டித்துத் திருத்துவது பெற்றோருக்கு சர்வேசுரனால் நியமிக்கப்பட்ட முக்கிய கடமைகளுள் ஒன்று. இக்கடமையை மறந்துபோவதும் அலட்சியம் செய்வதும் பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்குச் செய்யும் பெரும் தீங்கு. வயல்களில் முளைத்து வளரும் களைகளை வெட்டியெறிய விவசாயிகள் எவ்வளவு ஜாக்கிரதையாக இருக்கிறார்கள்! தக்க காலத்தில் களைகளை வெட்டாமல் விட்டுவிட்டால் பயிர் அழிந்துபோகுமென்று அவர்களுக்குத் தெரியும். நற்பயிர் நடுவில் வளரும் களைகளைப் போலவே பிள்ளைகளின்  நற்குணச் செய்கை மத்தியில் துர்க்குணமும் துர் நடத்தையும் நாளாவட்டத்தில் வளர்ந்து பலங்கொண்டெழும்பும். விவேகமுள்ள தாய்தந்தையர் தங்கள் பிள்ளையின் ஞான ஜீவியத்தைக் கெடுத்தழிக்கும் களைகளாகிய துர்க்குணங்கள் வளராமல் ஆரம்பத்திலேயே அவற்றைக் கிள்ளி எறிந்து விடுவார்கள். இப்படிச் செய்யத் தவறினால் இவை வளர்ந்தெழுந்து பிள்ளையின் நல்லெண்ணம், நற்கருத்து, நல்ல மனசு எல்லாவற்றையும் நொருக்கி அழித்துவிடும். பிள்ளை பெரியவனானபின் அவனைத் திருத்துவது எளிதன்று. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா? தொட்டில் பழக்கம் கல்லறைமட்டும் என்பது இந்தப் பிள்ளையின் விஷயத்தில் நிறைவேறும்.

சில தாய்மார் தங்கள் பிள்ளையின் குற்றங்குறைகளைக் கண்டியாமல் கண்ணை மூடிக்கொண்டு, மிருகங்கள் தங்கள் குட்டிகளை வளர்ப்பதுபோல் யதேச்சையாய் திரியவிடுவார்கள். பள்ளிக்கூடத்திற்குப் போகமாட்டேன், படிக்கமாட்டேன் என்று பிள்ளை பிடிவாதம் பிடித்தால், அதன் மனதுபோல் விட்டுவிடுவார்கள். தகப்பன் அல்லது ஆசிரியர் முரட்டுப்பிள்ளையை அடக்க முயற்சித்தால் தாய்க்கு கோபாவேஷம் பொங்கிவிடும். இவ்வாறு தாய் கொடுக்கும் செல்லத்தினால் சீரழிந்த பிள்ளை வளர்ந்து பெரியவனாகி யாருக்கும் கட்டுப்படாத அடங்காப் பிடாரியாய்த் திரிவான். குடும்பத்திற்கு அவமானம் வருவிப்பான். துஷ்ட தோழர்களோடு கூடி தனது ஆத்துமத்தின் பரிசுத்த கற்பையும் இழந்துவிடுவான். ஞானஸ்நானம் பெற்று சர்வேசுரனுடைய பிள்ளையாய் மாசற்ற ஜீவியம் ஜீவித்து வந்த பாலகன் இவ்வாறு கெட்டுப்போய்

சர்வேசுரனுக்கும் பெற்றோருக்கும் துரோகியானதற்குக் காரணம் இவனை வளர்த்த தாய்தான் என்றால் பொய்யாகாது. அளவுக்கு மீறி செல்லங்கொடுத்த தாயின் குருட்டுப்புத்தியே பிள்ளையின் சீர்கேட்டுக்குத் தூண்டுதலாயிருந்தது. புருஷனை இழந்த விதவைகளுள் சிலர் தங்கள் பிள்ளைகள் மட்டில் வைத்திருந்த முறையற்ற பாசத்தினால் அவர்களைக் கண்டியாமலும், திருத்தாமலும் விட்டுவிடுகிறதுண்டு. இந்தப் பிள்ளைகளைப் பற்றி கைம்பெண் வளர்த்த கழிசிறை என்ற நமது பாஷையில் ஓர் இழிச்சொல் வழங்குவதை அறியாதார் எவருமிலர்.

சூசை ஓர் எளிய விதவையின் ஏக புத்திரன். ஒரே பிள்ளையென்று தாய், அவனுக்கு அதிக இளக்காரம் கொடுத்து வளர்த்தாள். சூசைக்கு ஓர் துர்க்குணம் இருந்தது. பள்ளிக்கூடத்தில் தன் உடன் மாணவரின் பென்சில், காகிதம், புத்தகம் முதலான பொருட்களைத் திருடி வீட்டுக்குக் கொண்டு வந்து விடுவான். தாய் இதை அறிந்தும் அவனை ஒருபோதும் கண்டித்ததே கிடையாது. அடுத்த வீட்டில் தப்பித்தவறி யாதொரு பொருள் தரையில் கிடந்தால் எவருக்கும் தெரியாமல் எடுத்துவந்து தாயிடம் கொடுத்துப் பத்திரப்படுத்தி வைப்பான். அந்நியர் தோட்டங்களில் புகுந்து காய்கறி கனிகளைத் திருடித் தாயிடம் கொடுப்பான். அவள் அவற்றை வாங்கி சமைத்து அவனுக்குப் பரிமாறுவாள். ஆசிரியர் இவனைக் கண்டித்தால் தாய் அவர்களோடு சண்டைக்குப் போய்விடுவாள். இவ்வாறு வளர்த்த பிள்ளை பெரியவானதும் துஷ்டர்களோடு சேர்ந்து ஓர் கொள்ளைக் கூட்டத்தின் தலைவனாகிவிட்டான் என்றால் ஆச்சரியப்பட இடமில்லை. ஒருநாள் சூசையும் அவன் தோழர்களும் ஒரு பெரிய மாளிகையில் நுழைந்து கொள்ளையடிக்கும்போது தன்னைப் பிடிக்கவந்த வேலைக்காரனை சூசை தன் உடை வாளினால் குத்திக் கொன்றுபோட்டான்.

இக்கொலைக்குத் தண்டனையாக நீதிபதி சூசையைத் தூக்கிலிடும் நாள் வரவே தூக்கிலிடும் ஸ்தலத்தில் ஜனத்திரள் வந்து கூடியிருந்தது. காவலர் சூசையை விலங்கிட்டு குறித்த நேரத்தில் தூக்கு மரத்தின் அடியில் கொண்டுபோய் நிறுத்தினார்கள். அச்சமயம் சூசை தான் ஏதோ பேச விரும்புவதாகச் சொல்லி உத்தரவு பெற்று ஓர் சிறு சொற்பொழிவாற்றினான்:

“ இங்கு கூடியிருக்கும் ஜனங்களே, கேளுங்கள். நான் இவ்வாறு தூக்குமரத்திற்கு வந்ததற்கு, அதோ நிற்கிறாளே, என் தாய், அவள்தான் முக்கிய காரணம். நான் சிறுவனாயிருக்கும்போது அவள் என்னைக் கண்டித்து நடத்தவில்லை. நான் அபகரித்துவந்த திருட்டுப் பொருட்களையெல்லாம் சந்தோஷமாய் வாங்கிக்கொண்டாள். அவளையும் பிடித்து என்னுடன் தூக்குப்போட்டுக் கொல்லுங்கள்” என்று தன் சிறு பிரசங்கத்தை முடித்தான்.

பக்தியுள்ள தாய் தந்தையர் தங்கள் பிள்ளைகளை வளர்க்கும் அதிமுக்கிய அலுவலில் குருடராயிராமல், தங்கள் கண்களிரண்டினையும் விரியத்திறந்து, அவர்கள் குற்றங்களைக் களைந்து நற்குணத்தைப் பாராட்டி சிறுவரின் நண்பராகிய திவ்விய சேசுவின் இருதயத்துக்கு உகந்த பிள்ளையாய் நடக்கும்படி அவர்களைப் பழக்குவார்களாக.